பழுதடைந்து போக்குவரத்திற்கு லாயக்கு இல்லாமல் இருக்கின்றன. வெகுநாட்களாக அந்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே சம்பந்தப்பட்ட துறையினர் விரைவிலே இந்த வேலைகளை செய்வதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்.

விதி 106-ன் கீழ் மின்துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி 106-ன் கீழ் அறிக்கை ஒன்றை அவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்,

அறிக்கை

தூத்துக்குடி அனல் மின்நிலையம் தொடர்ந்து திறம்பட செயல் பட்டு வருவதாலும் அண்மையில் பெய்துள்ள மழையின் காரணமாகவும், தற்பொழுது அமுலிலுள்ள மின்வெட்டு 20-2-84 முதல் கீழ்க்கண்டவாறு தளர்த்தப்படுகிறது.

1. விவசாயத்திற்கு தற்பொழுது மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்படுகிறது. இனி விவசாய மின் இணைப்புகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் ஆக மொத்தம் 14 மணி நேரம் ஒவ்வொரு பிரிவுக்கும் மின்சாரம் வழங்கப்படும்.

2. உயர் அழுத்த மின்சக்தியை பயன்படுத்தும் இன்றியமையாத மின் இணைப்புகளுக்கும் வீட்டு உபயோகத்திற்கான மின் இணைப்புகளுக்கும் தற்பொழுது 15 சதவீத மின் வெட்டு அமுலில் உள்ளது, இனி, இவைகளுக்கு மின் வெட்டு கிடையாது.

3. உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கும் வணிக மின் இணைப்புகளுக்கும் தற்பொழுது மின் உச்சத் தேவையிலும் மின் சக்தியிலும் 30 சதவீத வெட்டு அமுலில் உள்ளது. இனி, மின்சக்தியில் வெட்டு இராது. மின் உச்சத் தேவையில் மட்டும் 15 சதவீத வெட்டு உண்டு.

4. மின்சக்தியை அதிக அளவில் பயன்படுத்தும் தொழில்களுக்கு மின்சக்தியிலும் மின் உச்சத் தேவையிலும் தற்பொழுது உள்ள 50 சதவீத மின்வெட்டுக்குப் பதிலாக இனி 30 சதவீத மின்வெட்டு மட்டுமே அமுல் படுத்தப்படும்.

மேற்கண்ட அரசின் முடிவுகளை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

(இரவு 6.30)

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்—(தொடர்ச்சி)

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு தலைவர் வர்களே, ஆளுநர் உரையின் மீது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாவட்ட பிரிவினை சம்பந்தமாக சொல்லும்போது 16 மாவட்டங்கள் என்று இருந்ததை 24 மாவட்டங்களாக இன்றைக்கு பிரிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கப்பட வேண்டிய விஷயம் தான். மாவட்ட பிரிவினை என்று வருகிறபோது கமிஷன் அமைக்கப்பட்டு அதன்மூலம் ஒரு நிரந்தரமான முடிவிற்கு கொண்டுவர வேண்டுமென்று சொல்லப்படுகிறது. நான் இங்கே குறிப்பாக சொல்ல விரும்புவது மாவட்ட பிரிவினை குறித்து இங்கே சட்டசபையிலே அறிவித்தாகி விட்டது. ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவரும் இன்னென்ன மாவட்டங்களுக்கு இன்னென்ன தாலுக்காக்கள் தான் இருக்க வேண்டுமென்று ரெக்கமன்டேஷன்ஸ் செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இன்றைக்கு டி. டி. சி. ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஒரே மாவட்டமாக இருந்தாலும் அங்கே கடந்த 10, 12 வருடங்களாக இரண்டு டி. டி. சி. மீட்டிங் நடந்து கொண்டிருக்கிறது. காலையிலே ஈஸ்ட் ராம்னாட் மாலையிலே வெஸ்ட் ராம்னாட் மீட்டிங் என்ற முறையிலே நடந்து கொண்டு வருகிறது. ஆனால் இன்றைக்கு நீங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரிப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். உண்மையிலேயே மாவட்டப் பிரிவினை உங்களுடைய நோக்கமாக இருந்தால் இனி மேல் ஒரே நாளில் இரண்டு கூட்டங்கள் என்று இல்லாமல் தனித்தனியாக மூன்று டி. டி. சி மீட்டிங் நடைபெறுவதற்கு உத்தரவாதம் கொடுக்க முடியுமா? அப்படி உத்தரவாதம் செய்யப்படுமானால் தான் நீங்கள் மாவட்டங்களைபிரிக்கும் எண்ணம் உடையவர்கள். அந்த எண்ணத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள் என்பதிலே எங்களுக்கு நம்பிக்கை ஏற்படும். இல்லை என்றால் எங்களுக்கு நம்பிக்கை ஏற்படாது. ஏனென்றால் பல தடவைகளில் ஆளுநர் உரையிலேயும் மற்ற வகையிலேயும் வாக்குறுதிகளை கொடுத்துவிட்டு, பின்னால் அமுலாக்குகின்ற நிலையிலே முடியவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தல் பற்றி அறிவித்திருக்கிறீர்கள். பஞ்சாயத்துத் தேர்தல் நடக்குமா நடக்காதா என்று பல உறுப்பினர்கள் சொன்னார்கள். நான் தொடர்ந்து பல வருஷங்களாகப் பார்த்து வருகிறேன். பஞ்சாயத்துத் தேர்தல் அண்ணா தி. மு. க. ஆட்சிக்கு வந்து ஏழு ஆண்டுகள் ஆகியும்